16.04.2026



**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.**

**அசல் வழக்கு எண்.49/2023**

**பி.வா.சா. 1 – செல்வராணி, க/பெ.பொன்னர்**

**சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனக்கு எழுத படிக்க தெரியும். வா.சா.ஆ.1 ஆவணத்தில் 2 வது எதிர்மனுதாரர் என காட்டப்பட்ட செல்வராணி என்பது என் பெயர் தான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள 1 வது எதிர்மனுதாரர் சித்ரா எனது தாயார். வா.சா.ஆ.1 ஆவணத்தில் மனுதாரர் அங்கம்மாள் இவ்வழக்கின் வாதியின் தாயார் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணமானது துறையூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நிறைவேற்று மனு எண் 20/2014 வழக்கிற்கு உண்டான ஆவணம் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணமானது அசல் வழக்கு எண் 14/99 மற்றும் நிறைவேற்று மனு எண் 20/2014 ன் தீர்ப்பாணை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ 3 ஆவணமானது அங்கம்மாளின் வாரிசு சான்றிதழ் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ 3 ஆவணத்தில் வரிசை எண் 1 ல் பெரியசாமி என குறிப்பிட்டிருப்பது என்னுடைய

தகப்பனார் என்று சொன்னால் சரிதான். 3 வதாக காண்பிக்கப்பட்டுள்ள தனம் தான் இவ்வழக்கின் வாதி என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரை தயாரிக்க நான் தான் எனது வழக்கறிஞருக்கு அறிவுரை வழங்கினேன். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை பத்தி 4 ல் சொல்லப்பட்டுள்ள வழக்குகளை பற்றி எனக்கு தெரியாது என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். அதன் பிறகு பத்தி 4 ல் சொல்லப்பட்டுள்ள வழக்குகளை பற்றி தெரிந்துகொள்ள முயற்சிகள் செய்தேன். அந்த வழக்குகளை பற்றி என் தாயார் மூலம் கேட்டு தெரிந்துகொண்டேன். அவ்வாறு என் தாயார் மூலம் கேட்டு தெரிந்துகொண்டேன் என்று சொல்லுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. பத்தி 4 ல் சொல்லப்பட்டுள்ள வழக்கு நடந்த விவரம் உண்மை என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் பத்தி 4 ல் சொல்லப்பட்ட வழக்குகள் பற்றி ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்த முதன்மை நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 1,2 சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் நான் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல சொல்லியுள்ளேன். நான் தாக்கல் செய்த முதன்மை நிரூபண

வாக்குமூலத்தின் பத்தி 1ல் சர்வே எண் 204/5 ஏக்கர் 2.38 செண்ட் நிலம் தந்தை வழி தந்தை பனையடியானுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என குறிப்பிட்டுள்ளேன். இந்த சங்கதியை நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் எனக்கு தற்போது குறிப்பிட்டுள்ளேனா என்று நினைவு இல்லை. எதிர்வழக்குரையில் இந்த சங்கதிகளை குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த முதன்மை நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 2ல் தாவா எ-அட்டவணை சொத்து தந்தை வழி தந்தை பனையடியானுக்கும் தாவா பி- அட்டவணை சொத்து எனது தகப்பனாரான பெரியசாமிக்கும், சி- அட்டவணை சொத்து எனது தகப்பனாரின் இளைய சகோதரர் பாலசுப்ரமணியனுக்கு ஒதுக்கப்பட்டது என குறிப்பிட்ட சங்கதிகளை எதிர்வழக்குரையின் நான்குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். சாட்சி மீண்டும் தாமாகவே இவ்வாறு சொல்லப்பட்ட சொத்து பங்கீடு சரி என சாட்சியம் அளிக்கிறார். எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்று தற்போது நினைவில்லை. பி.வா.ஆ.1 பாகபத்திரத்தில் எனது தகப்பனாருக்கு பிரிந்த சொத்தில் பாதை இருந்ததாக குறிப்பு காணபடவில்லை என்று சொன்னால் சரிதான். பூஸ்துதியில் பாதையை ஒட்டியே வயல் உள்ளதால் எழுதப்படவில்லை. 1980ம்

ஆண்டு நடைபெற்ற பாகப்பிரிவினையில் அங்கம்மாள் மற்றும் அங்கம்மாளின் இரு பெண் வாரிசுகளுக்கும் பாகம் ஒதுக்கபடவில்லை என்றால் நான் பிறந்ததே 1981ம் ஆண்டு தான். அதனால் அதை பற்றி எனக்கு தெரியாது. பி.வா.ஆ.1 பாகபத்திரத்தில் உள்ள அனைத்து சங்கதிகளை தெரிந்து வைத்துள்ளீர்கள். தற்பொழுது பெண் வாரிசுகளுக்கு பாகம் ஒதுக்கப்படவில்லை என்று மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் தாயாரிடம் இரு பெண் வாரிசுகளுக்கும் பாகம் ஒதுக்காததை பற்றி அவசியம் இல்லை என்பதால் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை. தாவா சொத்து தென்வடல் மயான பாதைக்கு கிழக்கில் உள்ளது என்று சொன்னால் சரிதான். சின்னஏரிக்கரைக்கு மேற்கு என்று சொன்னால் சரிதான். மேலும் சின்ன ஏரிக்கு மேற்கில் தான் எங்களுக்கு நிலம் என்று சொன்னால் சரிதான். எங்களுடைய நிலத்திற்கு மேற்கு திசையில் வாதிக்கு நிலம் உள்ளது என்று சொன்னால் சரிதான். அன்னாவி என்பவரின் நிலத்திற்கு வடக்கு எனக்கும் வாதிக்கும் நிலம் உள்ளது என்று சொன்னால் சரிதான். மயான பாதைக்கு கிழக்கு பக்கத்தில் பொது கிணறு உள்ளது என்றால் சரிதான். அந்த பொது கிணற்றை ஒட்டி 5 அடி அகலத்தில் பாதை மோட்டார் கொட்டகைக்கு செல்கிறது என்று சொன்னால் சரிதான். அந்த மோட்டார் கொட்டகைளை ஒட்டி பொதுவாக சுமார் 1 அல்லது 1 ½

செண்ட் நிலம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இவ்வாறு உள்ள 1 ½ செண்ட் நிலத்தின் வழிக்கு தெற்கே என்னுடைய நிலத்திற்கு வரலாம் என்றால் சரிதான். கற்றறிந்த வாதி வழக்கறிஞர் காண்பித்த புகைப்படத்தில் உள்ள கிணறு பொது கிணறு என்றும், இரண்டு வயல்களுக்கு இடையே தென்னை மரத்தை நோக்கி செல்லும் பாதை வழியாக சென்றால் தன் நிலத்திற்கு செல்லலாம் என்று சாட்சி கூறுகிறார். இந்த புகைப்படத்திற்கு சாட்சிய சட்டப்பிரிவு 65B-ன் கீழ் சான்றிதழ் இல்லை. சாட்சி ஒப்புக்கொண்டதால் ஆவணம் ஆட்சேபனையுடன் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ.5 புகைப்படத்தில்உள்ள நிலத்தில் சக்கர அச்சு உள்ள இடம் தான் வாதிக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். அதற்கு அடுத்தார்போல் உள்ள வயல் தான் எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கானது வா.சா.ஆ.5 புகைப்படத்தில் உள்ள வாதியின் நிலத்தின் வழியாக நாங்கள் பாதை அமைத்து எங்கள் இடத்திற்கு விவசாயம் செய்ய முயற்சி செய்ததால் தான் வழக்கு தாக்கலானது என்று சொன்னால் சரிதான். ஆனால் காவல் துறையின் அனுமதி பெற்று தான் வண்டியை எடுத்து சென்றேன். வா.சா.ஆ.5 புகைப்படத்தில் உள்ள வரப்பானது அன்னாவி என்பவரின் நிலத்திற்கும் எங்களுடைய நிலத்திற்கும்

16.04.2026



இடையே உள்ள வரப்பு என்று சொன்னால் சரிதான். இவ்வாறு காவல் துறை அனுமதி அளித்தது பற்றி ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். காவல் துறையில் ஆவணம் கொடுத்தார்களா என்றால் இல்லை. தொலைப்பேசி வாயிலாக வாகனத்தை எடுத்துசென்று அறுவடை செய்யுமாறு கூறினார்கள். பொய் சாட்சியம் அளிக்கிறேன். நான் அதிகாரத்தை பயன்படுத்தி வாதியின் நிலத்தில் பாதை அமைத்து வாகனத்தை எடுத்துசென்றேன் என்றால் சரியல்ல. காவல் துறை அனுமதி அளிக்கவில்லை நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல் துறை அனுமதி அளித்திருந்தால் கடிதம் கொடுத்திருப்பார்கள். நான் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் பொய்யானது என்றால் சரியல்ல. எங்களுக்கு கிணற்றை ஒட்டி 5 அடி அகலத்தில் பாதை தனியாக உள்ளது வாதியின் நிலத்தை அபகரிக்க முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு வாரிசுகள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கும் வாதிக்கும் பாத்தியப்பட்ட நிலங்கள் நீதிமன்றம் மூலம் பிரித்துக்கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். நீதிமன்றம் மூலம் பிரித்து கொடுக்கப்பட்ட சொத்துக்களை வாதியும் நானும் முறையாக அனுமதிக்கவேண்டும். ஆனால் தீர்ப்பை மீறி வாதியின் நிலத்தை அபகரிக்க

16.04.2026



முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற தீர்ப்பை நான் அவமதிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.  வழக்கு அனுமதிக்கதக்கது. என்னுடைய வழக்கு நிலைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

/உண்மை நகல்/
ஒம்/–திரு.தி. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.